**செய்திக் குறிப்பு எண்:** 61 **நாள்: 09.09.2023**

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 'எண்ணித்துணிக' பகுதி 9: ஆசிரியர்கள், கல்வியாளர்களுடன் சென்னை ஆளுநர் மாளிகை, பாரதியார் மண்டபத்தில் இன்று (09.09.2023) நடத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்.

ஆளுநர் மாளிகை ஏற்பாடு செய்து நடத்தி வரும் "**எண்ணித் துணிக**" நிகழ்ச்சியின் ஒன்பதாவது பகுதி நிகழ்வாக தங்களின் சிறப்பான சேவைகளுக்காக தேசிய மற்றும் மாநில அளவிலான நல்லாசிரியர் விருதுகளைப் பெற்ற ஆசிரியர்களையும் கல்வியாளர்களையும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பாராட்டினார். நாட்டின் இளம் மற்றும் பிரகாசமான மனங்களை வடிவமைப்பதற்கும், தேசத்தை கட்டியெழுப்புவதற்கு இணையற்ற பங்களிப்புகளை வழங்கும் ஆசிரியர்களின் மகத்தான பங்களிப்புக்காக அவர்களை ஆளுநர் பாராட்டினார்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஒரு இளம் மனதின் ஆளுமையை வடிவமைப்பதில் ஆசிரியர்களுக்கு இருக்கும் முக்கிய பங்கு பற்றி பேசினார். மாணவர்களின் கனவுகளை ஊக்குவிக்கவும் உந்து சக்தியாகவும் விளங்கும் ஆசிரியர்களே அந்த கனவுகளை பலப்படுத்தி திறமைவாய்ந்தவராகவும் பொறுப்புள்ள நபராகவும் மாணவர்களை மாற்றக்கூடியவர்கள் என்று குறிப்பிட்டார். ஒரு ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான சிறப்புப் பிணைப்பு பற்றி பேசுகையில், தேசத்தில் நிலவி வந்த குரு வழி பாரம்பரியம் மற்றும் மரபு பற்றி விரிவாகக் கூறினார். அதில், ஒரு ஆசிரியர் மாணவனை பாட புத்தகங்கள் மற்றும் பாட திட்டங்களுக்கு அப்பால் ஒரு லட்சிய கனவு காண்பவராகவும், ஆற்றல்மிக்க மனிதராகவும் மாற்றுபவராகவும் விளங்கினார் என்று ஆளுநர் கூறினார். இந்தப் பண்பாடு எவ்வாறு நமது அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை விவரித்த ஆளுநர், நமது அரசியலமைப்பின் ஒரு பகுதியை உருவகப்படுத்தும்போது கூட அதில் குருகுலம் (நந்தலால் போஸால் வரைந்தது) படம் இருந்ததை எடுத்துக்காட்டினார்.

சமூகத்தில் ஆசிரியர்கள் வகிக்கும் குறிப்பிடத்தக்க பங்கு, அவர்களுக்கு எவ்வாறு தார்மீக அதிகாரம் உள்ளது மற்றும் ஒரு கிராமம் தங்களை வழிநடத்தவும் ஆலோசனை வழங்கவும் அங்கிருக்கும் ஆசிரியரை எதிர்நோக்கியிருந்ததை வைத்து அறியலாம் என்று ஆளுநர் தெரிவித்தார். ஆசிரியருக்கும்

மாணவர்களுக்கும் இடையிலான உறவில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து தமது கவலைகளை வெளிப்படுத்திய ஆளுநர், அந்த உறவு தற்போது பரிவர்த்தனை மிக்கதாக மாறியுள்ளது. இன்று கற்பித்தல் ஒரு வேலையாக கருதப்படுகிறது என்று கூறினார். ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், ஸ்பூட்னிக் விண்கலன் பற்றி தம்மிடம் பகிர்ந்ததன் மூலம் தமது பள்ளி ஆசிரியர் எவ்வாறு தம்மை கவர்ந்தார் என்று ஆளுநர் குறிப்பிட்டார். நம் நாட்டில் ஒவ்வோர் குழந்தையையும் தேசத்தின் சொத்து என்று அழைத்த ஆளுநர், அந்த தேசத்தின் வெற்றி, மாணவர்கள் அடையும் வெற்றியில் தான் அடங்கியுள்ளது என்று கூறினார்.

நமது தேசம், புரட்சிகர மாற்றத்தின் உச்சியில் இருப்பதால், இந்த மகத்தான நாட்டை 2047க்குள் விஸ்வ குருவாக மாற்ற உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் முன்னேறி வருவதாகவும் இந்த காலகட்டம் மிகவும் முக்கியமானது என்றும் மாண்புமிகு ஆளுநர் குறிப்பிட்டார். இந்த தேச கட்டமைப்புப் பணியில் ஆசிரியர்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்திய ஆளுநர், நமது இளம் குழந்தைகளில், குறிப்பாக மாணவர்களின் ஆளுமைகள், அவர்களின் திறனையும் அவர்களைச் சுற்றியுள்ள வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் உணரச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சமூகத்தில் பெண்கள் பங்கேற்பின் முக்கியத்துவம் பற்றி மகாகவி பாரதியார் பாடிய "**பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்**, **பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"** என்ற வரிகளை ஆளுநர் மேற்கோள் காட்டினார். நமது பிரதமர் தேச வளர்ச்சியில் பெண்களின் பங்கை அடிக்கடி குறிப்பிடுவதோடு, ஒவ்வொரு துறையிலும் பெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தும், பெண்களால் இயக்கப்படும் வளர்ச்சி மற்றும் பெண்கள் வழிநடத்தும் இந்தியா என்றும் அழைத்து வருவதை ஆளுநர் குறிப்பிட்டார். கல்லூரி அளவில் பதக்கம் வென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அவர்களின் திறமையை வெளிக்கொணர, அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை ஆசிரியர்கள் மேம்படுத்தி, வழிகாட்ட வேண்டும் என்று ஆளுநர் அறிவுறுத்தினார்.

வள்ளலாரின் "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வரிகளை இந்நிகழ்ச்சியில் நினைவுகூர்ந்து பேசினார். புது டெல்லியில் நடைபெற்று வரும் ஜி-20 உச்சிமாநாடு பற்றி பேசும்போது, பாரதத்தின் நித்திய நெறிமுறைகள் அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் கூட்டு உலகத்திற்கான வழியை 'வசுதைவ குடும்பகம்' என்ற நோக்கம் எவ்வாறு காட்டுகிறது என்பதை ஆளுநர் எடுத்துரைத்தார். ஆஃப்ரிக்க ஒன்றியத்தை ஜி20 நாடுகள் அமைப்பில் இடம்பெறச்

செய்ய பிற நாடுகளை இந்தியா எவ்வாறு சம்மதிக்க வைத்தது என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், திருமதி. பாரதி பாஸ்கர், தமிழ் பேச்சாளர் மற்றும் எழுத்தாளர்; திருமதி. ஜானகி சபேஷ், நடிகை; டாக்டர் ராஜம்மாள், படுகர் சமூகத்தைச் சேர்ந்த தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர்; தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள், திருமதி. மஞ்சு பிரியா, வீரம்மாள் கல்வி தொண்டு அறக்கட்டளை, விருந்தினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை – 22 வெளியீடு:

நாள்: 09.09.2023 மக்கள் தொடர்பு அலுவலகம்